## நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வகாப் எம்.எல்.ஏ. – மேயர் ராமகிருஷ்ணன் முன்னிலை!

# நெல்லை 9வது பொருநை புத்தகத் திருவிழா - சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தொடங்கிவைத்தார்!

## மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் தலைமை!

நெல்லை, பிப்.13 –

நெல்லை மாவட்டம் 9வது பொருநை நெல்லை புத்தகத் திருவிழா துவக்க விழா நிகழ்வு திருநெல்வேலி மாநகராட்சி வர்த்தக மையத்தில் 10.02.2026 அன்று மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெற்றது.இந்நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று புத்தகத் திருவிழாவை துவக்கி வைத்தார்.

நெல்லை மாவட்டம், டவுன் திருநெல்வேலி மாநகராட்சி வர்த்தக மையத்தில் மாவட்ட நிர்வாகம் சார்பில் நடைபெற்ற 9வது பொருநை நெல்லை புத்தகத் திருவிழாவினை சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு,மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் தலைமையில்,நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப்,மாநகராட்சி மேயர்.கோ. ராமகிருஷ்ணன்,சாகித்ய அகாடமி விருதாளர் வண்ணதாசன்,இளம் எழுத்தாளர் சூடாமணி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் துணை வேந்தர் முனைவர் என்.சந்திரசேகர், திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர் மரு.மோனிகா ராணா, துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து, புத்தக அரங்குகளை பார்வையிட்டார்.

பின்னர் சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது.

திருநெல்வேலியின் பண்பாட்டு அழகியலையும், வரலாற்று பெருமைகளையும் உலகிற்கு பறைசாற்றும் விதமாக 9வது பொருநை நெல்லை புத்தகத் திருவிழா தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

126 புத்தக அரங்கங்களில் உள்ளூர் வரலாறு முதல் உலக வரலாறு வரை, உள்ளூர் இலக்கியம் முதல் உலக இலக்கியம் வரை அனைத்து வகை நூல்களும், அறிவியல், அரசியல், ஆன்மிகம்,சிறார் இலக்கியம், புதினம்,கவிதை போட்டித் தேர்வு என நம் பரணியின் பாய்ச்சலைப் போலவே பல்வேறு புத்தகங்கள் ஒவ்வொரு அரங்குகளிலும் அடுக்கப் பட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் புத்தகங்கள் வாசிப்பதற்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுத்தவர். முன்னாள் தலைவர்களான தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் மற்றும் நமது முதலமைச்சர் அவர்கள் வரை தமிழையும்,தமிழ் மொழியினை காப்பதற்கு எண்ணற்ற நடவடிக்கை களை மேற்கொண்டார்கள்.

முதலமைச்சர் அவர்கள் எழுத்தாளர்களை கௌரவிக்கும் வகையில் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களுக்கு வீடு வழங்கும் திட்டத் தினை செயல்படுத்தினார்கள். சாகித்ய அகாடமி விருதை போன்று தமிழ்நாட்டிலும் மாநில அரசின் சார்பில் விருதுகள் வழங்க வேண்டுமென்று புத்தக பதிப்பாளர்களின் கோரிக்கையினை ஏற்று, சென்னையில் பன்னாட்டு அளவில் நடைபெற்ற புத்தகத் திருவிழாவில் செம்மொழி இலக்கிய விருது வழங்கப்படும் என அறிவித்தார்கள்.

இந்த விருது ஒவ்வொரு மொழியிலும் உள்ள தலைசிறந்த எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் என அறிவித்துள்ளார்கள்.இவ்வாறு எழுத்தாளர்களையும், பதிப்பாளர்களையும் விருகளை வழங்கி, பாராட்டும் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு திகழ்கிறது.

பொதுமக்கள் தினமும் அரை மணி நேரம் ஒதுக்கி புத்த கங்களை வாசிக்க வேண்டும் அல்லது குறைந்தபட்சம் தமிழ் அல்லது ஆங்கில நாளிதழ்களில் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார். முன்னதாக மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார் தெரிவித்ததாவது.

திருநெல்வேலியின் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் 9வது பொருநை நெல்லை புத்தகத் திருவிழாவில் இன்று முதல் 10.02.2026 வரை 13 நாட்கள் நடைபெறவுள்ளது.புத்தக அரங்குகளுடன் கூடுதலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் 20 தயாரிப்பு பொருள் விற்பனை அரங்கங்கள்,வேளாண்துறையில் ஆர்வத்தை ஏற்படுத்தும் இயற்கை விளை பொருட்கள் அரங்கம். அறிவியலின் ஆர்வத்தை ஏற்படுத்தும் இஸ்ரோவின் சிறப்பு அரங்கம் மற்றும் கூடன்குளம் அணுமின் நிலைய அரங்கம், கலையில் ஆர்வத்தை ஏற்படுத்தும் ஓவிய அரங்கம் மற்றும் கைவினைப் பொருட்கள் பயிற்சி பட்டறை அரங்கம்.பழங்கால பொருட்கள் அரங்கம் என பல்வேறு சிறப்பு அரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டு ள்ளன.மேலும்,கூடுதலாக தேர்தல் சிறப்பு அரங்கமும்,தொல்லியல் கழகத்தின் பழந்தமிழர் காசுகள் கண்காட்சி அரங்கமும் அமைக்கப் பட்டுள்ளது.ஒவ்வொரு நாளும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியரின் போட்டிகள்,கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது இதனை பொதுமக்கள் அனைவரும் கண்டுகளிக்க வேண்டும்.நூல் வெளியீட்டு நிகழ்வுகள் இலக்கிய ஆளுமைகளின் செறிவான உரைகள், கவியரங்கங்கள், பட்டிமன்றங்கள்,இசை அரங்கங்கள் என பெரும் கலை அறிவு திருவிழாவாகவும்,இப்புத்தக திருவிழா நடைபெற உள்ளது. எழுத்தாளர்களின் உரைகள் தொகுக்கப்பட்டு சிறப்பு மலராகவும் இந்தாண்டு முதல் வெளியிடப் படவுள்ளது.

புத்தக திருவிழாவை நகர்ப்புறங்கள் முதல் குக்கிராமங்கள் வரை அனைத்து மக்களிடமும் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மாவட்ட நிர்வாகத் தின் சார்பாக பல்வேறு முன்னெடுப்புகள் இந்தாண்டு செய்யப்பட்டுள்ளன.புத்தகத் திருவிழாவிற்கு சிறப்பு பேருந்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டு ள்ளது.தமிழகத்தில் எந்த புத்தக திருவிழாவிலும் அல்லாத சிறப்பு அம்சமாக ஏஐ தொழில்நுட்பம் மூலமாக உருவாக்கப்பட்ட வாசிப்பு விழிப்புணர்வு காணொளிகள், குறும்படங்கள் இந்தாண்டு உருவாக்கப்பட்டுள்ளன. மாணவ, மாணவியர்கள்,பொதுமக்கள், வாசகர்களாகிய நீங்கள் தான் புத்தங்களை படித்து,தங்களது அறிவுத்திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து,திருநெல்வேலி மாநகரம் காவல் துறை, தீயணைப்புத்துறை சார்பில் கருத்தரங்கம், மேலும், இராமபூதத்தான் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பட்டிமன்றத்தில் இலக்கியங்கள் நினைத்து நிற்பதற்கு காரணம் படைப்பாளிகளா? படிப்பாளிகளா? என்ற தலைப்பில் படைப்பாளிகளே என்று.சித்ரா தேவி அவர்களும், செல்வகுமார் அவர்களும் உரையாற்றினார்கள். படிப்பாளிகளே என்று கோமதி கிருஷ்ணமூர்த்தி, செபாஸ்டின் அவர்களும் உரையாற்றினார்கள்.

நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.துரை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் சரவணன், திருநெல்வேலி வருவாய் கோட்டாட்சியர் பிரியா,தச்சநல்லூர் மண்டல ஆணையர் மகாலெட்சுமி மாநகராட்சி கவுன்சிலர் சகாய ஜூலியட் மேரி,பப்பாசி உயர்மட்ட குழு உறுப்பினர்கள் பாலாஜி,சங்கர், உள்பட கழக நிர்வாகிகள் மற்றும் மாணவ,மாணவியர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம்,குளத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்கண்டேயன் துவக்கி வைத்து பயனாளிகளுக்கு முகாமின் அட்டை மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கினார். நிகழ்வில் விளாத்திகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சின்னமாரிமுத்து, தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், வடக்கு மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் பாண்டியராஜன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குளித்தலை கை. அங்கமுத்து

**பிப்ரவரி 13 (2014)**



தலைவர் கலைஞர் அவர்கள் முதன்முறையாக சட்டமன்ற உறுப்பினராக குளித்தலை தொகுதியில் போட்டியிட்டபோது, குளித்தலை நகரக் கழகச் செயலாளராக பொறுப்பேற்றிருந்த இவர், தலைவர் அவர்களின் வெற்றிக்காக பாடுபட்டவர்.

கல்லக்குடி போராட்டத்தின்போது குளித்தலையில் கைதாகி, தலைவர் அவர்களுடன் திருச்சி மத்திய சிறையில் இருந்ததோடு, 'நங்கவரம்' போராட்டத்திலும் தலைவர் அவர்களுடன் கலந்து கொண்டவர். அத்துடன் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றவர்.

"மொழிப்போரில் பங்கேற்றது தனது கடமை" என்று சொல்லி, மொழிப்போர் தியாகிகளுக்கு அரசால் வழங்கப்படும் உதவித் தொகையை பெற்றுக் கொள்ளாமல் மறுத்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


# இரண்டாம் ஆண்டு
## நினைவஞ்சலி

பிப்ரவரி
13



அண்ணா அறிவாலயம்
## N.ஜெயக்குமார்
(துணை மேலாளர், அண்ணா அறிவாலயம்)
11.09.1950 - 13.02.2024

இப்படிக்கு,
**Dr.அருண் ஜெயக்குமார்** M.D.S.
துணைச் செயலாளர்,
மாநில மருத்துவ அணி.
மாதவரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர்